Register Number | | | | | | |

**Part III**

# புவியியல் / GEOGRAPHY

( New syllabus )

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 150

## பகுதி - I

*குறிப்பு :* i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) எல்லா வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

## பிரிவு - அ

( மதிப்பெண்கள்: 15 × 1 = 15 )

I. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. திமிங்கிலம் ............................ என்ற இனத்தைச் சார்ந்த நீந்தக் கூடிய உயிரினம் ஆகும்.

2. மத்திய ஆசியாவிலிருந்து வெளியேறிய நாடோடிகள் ............................ மற்றும் ............................ நாகரிகத்தை மாற்றி அமைத்தனர்.

3. ஆப்பிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்காவில் ........................ மற்றும் ........................ மோசமான பிரச்சனைகளாக இருந்து வருகின்றன.

4. மைய இடக் கோட்பாட்டை .......................... என்பவர் வெளியிட்டார்.

5. நாட்டுப்புறக் குடியிருப்பின் முக்கிய அம்சமாகக் காணப்படுவது ....................... ஆகும்.

6. ஒரு தொழில் அதற்குத் தேவையான பொருட்களை மற்றத் தொழிலிருந்து பெறுவதை ........................... என்கிறோம்.

7. பொருட்களின் அளிப்பும், அவற்றின் தேவையும் சந்திக்குமிடம் ............................ ஆகும்.

8. உள்நாட்டு வணிகம் ............................ மற்றும் ............................ வணிகங்கள் எனப்படுகின்றன.

[ Turn over

9. போக்குவரத்து பெரும்பாலும் ..................... மற்றும் ..................... மையங்களுக்கு இடையில் செயல்படுகிறது.

10. தொலைத்தொடர்பில் செய்திகள் யாவும் ................................... ஆக வெளிப்படுத்தப்படுகின்றன.

11. தொலை நுண்ணுணர்வு சாதனத்தின் மேடைகளில் பொருத்தப்பட்ட ..................... மற்றும் ..................... கருவிகள் புள்ளியிலிருந்து வெளியேறும் வெப்ப சக்தியை பதிவு செய்கின்றன.

12. தொலை நுண்ணுணர்வு நுட்பங்களைப் பயன்படுத்தி அறுவடைக்கு முன்பாகவே பயிரின் உற்பத்தியினை மதிப்பிடும் ஒரு தேசிய இயக்கம் ......................... ஆகும்.

13. உலகளவில் நீரின் தேவை அதிகரித்து கொண்டு வரக் காரணங்கள் ......................... மற்றும் ............................ ஆகும்.

14. ......................... தன்மையுடைய மக்களை சீர்குலைவுகள் தொடர்பு கொள்ளும் போது மட்டுமே சீரழிவாக மாறுகின்றது.

15. தற்போது இந்தியாவில் மக்களால் விறுவிறுப்பாக பேசப்பட்டு வருவது ......................... ஆறுகளின் இணைப்பு.

## பிரிவு - ஆ

(மதிப்பெண்கள்: 15 × 1 = 15)

II. அ) கீழ்வருவனவற்றைப் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| 16. | உவர் சேற்று நிலங்கள் | — | உயர் நில சூழ்வாழிடம் |
| 17. | இமயமலை | — | கடல் இயற் தொகுதி |
| 18. | முன்னேறிய பொருளாதாரம் | — | அத்தியாவசியமற்ற பிணைப்புகள் |
| 19. | காற்று மாசடைதல் | — | பின்னடையும் வயது பிரமிடு |
| 20. | வங்கிகள் | — | நகர வளர்ச்சி |

ஆ) கீழ்வருவனவற்றைப் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| 21. | வணிக கூட்டமைப்புகள் | — | உலக மேலாண்மை |
| 22. | டங்கல் ஒப்பந்தம் | — | அரசியல் ஒற்றுமை |
| 23. | கடலடி குடைவு வழி | — | உளவு செயற்கைக் கோள் |
| 24. | இஸ்ரேல் | — | கணிணிகள் |
| 25. | அச்சுப் புரட்சி | — | இரயில் போக்குவரத்து |

இ) கீழ்வருவனவற்றைப் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| 26. | குடி நீர் பற்றாக்குறை | — | வெப்பப் பாலைவனம் |
| 27. | இராஜஸ்தான் | — | மக்கள் தொகை வளர்ச்சி |
| 28. | க்யோடா ப்ரோடகல் | — | வெள்ளம் |
| 29. | ஹெயிட்டி | — | பல் நோக்கு வளங்கள் |
| 30. | அணைகள் | — | 67 நாடுகள் |

## பிரிவு - இ

( மதிப்பெண்கள்: $10 \times 1 = 10$ )

III. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் :

31. கடலடிப் பரப்பில் உள்ள தாவர சூழ்வாழிடம்

அ) *பிளாங்டன்* ஆ) *நெக்டான்*

இ) பெந்தாஸ் ஈ) முருகைகள்.

32. வளரும் நாடுகளில் மனித திறனை முழுமையாக வெளிக் கொணர வாய்ப்பின்மைக்கு காரணம்

அ) மக்கள் தொகை குறைவு

ஆ) வளங்களின் பற்றாக்குறை

இ) அடிப்படைத் சேவைகளின் பற்றாக்குறை

ஈ) மக்களின் உழைப்பின்மை.

33. கிராம மக்கள் நகர் புறங்களில் குடியேறுவதற்கு காரணம்

அ) வேலைக்காக ஆ) பொருள் வாங்க

இ) கேளிக்கை ஈ) ஆடம்பர வாழ்க்கை.

[ Turn over

34. நான்கு நிலைத் தொழில்களும் செயற்பாடுகளால் பிணைக்கப்பட்டிருப்பது

அ) இடுபொருள் பிணைப்பு ஆ) வெளிபடு பொருள் பிணைப்பு

இ) அத்தியாவசியப் பிணைப்பு ஈ) செயற்பாட்டு பிணைப்பு.

35. உலக நாடுகளுக்கிடையே நடைபெறும் வணிகம்

அ) ஊரக வணிகம் ஆ) பன்னாட்டு வணிகம்

இ) பண்டமாற்று வணிகம் ஈ) உள்நாட்டு வணிகம்.

36. இருவழித் தொடர்பு ஒரு இணையில்லா தொர்பு சாதனமாக விளங்குவது

அ) கம்பியில்லாத் தந்தி ஆ) தொலைபேசி

இ) வானொலி ஈ) தொலைக்காட்சி.

37. தேசீய வள மேலாண்மைக்காக இந்திய அரசாங்கம் அமைத்த தொகுதி

அ) என்.என்.ஆர்.எம்.எஸ் ( NNRMS )

ஆ) ஆர்.ஆர்.எஸ்.எஸ்.சி ( RRSSC )

இ) என்.ஆர்.ஐ.எஸ்( NRIS )

ஈ) டி.ஓ.எஸ் ( DOS ).

38. நிலத்தடி நீர் அதிகளவில் சேகரிக்கப்படும் பகுதி

அ) அடர்ந்த காடுகள் ஆ) பாலைவனங்கள்

இ) விவசாய நிலங்கள் ஈ) புல்வெளிகள்.

39. NDVI என்பது ............................ ஐ அடிப்படையாகக் கொண்டது.

அ) களப்பணி புள்ளி விவரம் ஆ) இரண்டாம் நிலைப் புள்ளி விவரம்

இ) நேர்முக புள்ளி விவரம் ஈ) செயற்கை கோள் புள்ளி விவரம்.

40. முதல் புவி நாள் கொண்டாடப்பட்ட நாடு

அ) ஐக்கிய அரசு ஆ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

இ) இஸ்ரேல் ஈ) சீராலியியோன்.

## பிரிவு - ஈ

( மதிப்பெண்கள்: 10 × 1 = 10 )

IV. சரியான வாக்கியத்தை தேர்ந்தெடு.

41. அ) முன்னொரு காலத்தில் 1700 ஆண்டுகளுக்கு ஒரு முறை இரட்டிப்பாகிய மக்கள் தொகை தற்பொழுது 20 வருடங்களிலேயே இரட்டிப்பாகிறது.

ஆ) முன்னொரு காலத்தில் 2000 ஆண்டுகளுக்கு ஒரு முறை இரட்டிப்பாகிய மக்கள் தொகை தற்பொழுது 30 வருடங்களிலேயே இரட்டிப்பாகிறது.

இ) முன்னொரு காலத்தில் 1700 ஆண்டுகளுக்கு ஒரு முறை இரட்டிப்பாகிய மக்கள் தொகை தற்பொழுது 30 வருடங்களிலேயே இரட்டிப்பாகிறது.

42. அ) மனித எண்ணிக்கை ஒரு சிறந்த வளமாக கருதப்படுகிறது.

ஆ) மனித எண்ணிக்கை ஒரு பிரச்சனையாக கருதப்படுகிறது.

இ) மனித எண்ணிக்கை ஒரு வெற்றியின் ஆதாரமாக கருதப்படுகிறது.

43. அ) குடியிருப்புச் சந்தைகள் முக்கோண வடிவமைப்பு கொண்டவை.

ஆ) குடியிருப்புச் சந்தைகள் செவ்வக வடிவமைப்பு கொண்டவை.

இ) குடியிருப்புச் சந்தைகள் அறுணகோண வடிவமைப்பு கொண்டவை.

44. அ) வான் தூணன் கோட்பாடு தொழிலக அமைவிட கோட்பாடு.

ஆ) வெபரின் கோட்பாடு தொழிலக அமைவிட கோட்பாடு.

இ) கிறிஸ்தாலரின் கோட்பாடு தொழிலக அமைவிட கோட்பாடு.

45. அ) ஒரு நாட்டின் நாணய மதிப்பு அந்நாட்டின் உள்நாட்டு வணிகத்தை பொறுத்தே அமைகிறது.

ஆ) ஒரு நாட்டின் நாணய மதிப்பு அந்நாட்டின் வணிகச் சமநிலையை பொறுத்தே அமைகிறது.

இ) ஒரு நாட்டின் நாணய மதிப்பு பன்னாட்டு வணிகத்தை பொறுத்தே அமைகிறது.

46. அ) உலகில் செறிந்த விமானப் போக்குவரத்து அமெரிக்காவின் லாஸ் ஏஞ்செலிஸ் நகரத்திலிருந்து நியூயார்க் வரை நடைபெறுகிறது.

ஆ) உலகில் செறிந்த விமானப் போக்குவரத்து அமெரிக்காவில் நியூயார்க் நகரத்திலிருந்து கலிபோர்னியா வரை நடைபெறுகிறது.

இ) உலகில் செறிந்த விமானப் போக்குவரத்து லண்டன் நகரத்திலிருந்து சிட்னி வரை நடைபெறுகிறது.

47. அ) உலகின் ஆற்றல் வளம் நீர்.

ஆ) உலகின் ஆற்றல் வளம் சூரியன்.

இ) உலகின் ஆற்றல் வளம் பெட்ரோலியம்.

48. அ) பிரேசிலுக்கும் அர்ஜென்டினாவிற்கும் இடையில் ஓரினாகோ நதி குறித்த வாதம் உள்ளது.

ஆ) பிரேசிலுக்கும் அர்ஜென்டினாவிற்கும் இடையில் லா பிளாட்டா நதி குறித்த வாதம் உள்ளது.

இ) பிரேசிலுக்கும் அர்ஜென்டினாவிற்கும் இடையில் மிஸிஸிபி நதி குறித்த வாதம் உள்ளது.

49. அ) டி.பி.ஏ.பி. ( DPAP ) என்பது மத்திய அரசாங்கத்தின் ஆதரவுடன் செயல்பட்டு வருகிறது.

ஆ) டி.பி.ஏ.பி. ( DPAP ) என்பது மாநில அரசாங்கத்தின் ஆதரவுடன் செயல்பட்டு வருகிறது.

இ) டி.பி.ஏ.பி. ( DPAP ) என்பது ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவுடன் செயல்பட்டு வருகிறது.

50. அ) ஐக்கிய நாடுகளின் மாநாடு 2002 இல் ஜோகனேஸ்பர்க்கில் நடைபெற்றதின் நோக்கம் மென்பொருள் மேம்பாடு.

ஆ) ஐக்கிய நாடுகளின் மாநாடு 2002 இல் ஜோகனேஸ்பர்க்கில் நடைபெற்றதின் நோக்கம் சமுதாய மேம்பாடு.

இ) ஐக்கிய நாடுகளின் மாநாடு 2002 இல் ஜோகனேஸ்பர்க்கில் நடைபெற்றதின் நோக்கம் பேணத் தகுந்த மேம்பாடு.

## பகுதி - II

( மதிப்பெண்கள்: $15 \times 2 = 30$ )

V. *குறிப்பு :* i) 50 வார்த்தைகளில் சுருக்கமாக விடையளி.

ii) எல்லா வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

iii) ஏதேனும் 15 வினாக்களுக்கு மட்டும் விடையளி.

51. சூழலமைவு - வரையறு.

52. அமைவிடக் கோட்பாடு - வரையறு.

53. தகவல்களின் வெடிப்பு - வரையறு.

54. புவி நிலையங்கள் - வரையறு.

55. நிலச் சீர்குலைவு - வரையறு.

56. உலக வெப்பம் - வரையறு.

57. நேரிணை வணிகம் - வரையறு.

58. 'நெக்டான்' சிறுகுறிப்பு வரைக.

59. சதுப்பு நிலங்கள் குறிப்பு வரைக.

60. முற்காலத்தில் மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்திய இயற்கைத் தடைகள் யாவை ?

61. வயதின் அடிப்படையில் மனிதப் பணித் திறனை எத்தனைப் பிரிவுகளாகப் பிரிக்கலாம் ? அவை யாவை ?

62. மக்கள் தொகைப் பரவல் சீரற்றிருக்க காரணங்கள் யாவை ?

63. மூன்றாம் நிலைத் தொழில்கள் யாவை ?

64. வணிகச் சமநிலை என்றால் என்ன ?

65. பல்வேறான கணிணித் தலைமுறைகள் யாவை ?

66. சூரியனோடு ஒத்திருக்கும் செயற்கை கோள் என்றால் என்ன ?

67. பாலைவனமாதல் எவ்வாறு ஏற்படுகிறது ?

68. மழை நீர் அறுவடை பற்றி நீவிர் அறிந்தவை யாவை ?

69. வன உயிரின பாதுகாப்பு அவசியம் ஏன் ?

70. வளர்ந்து வரும் நாடுகளில் நன்னீர் சார்பான இரண்டு சிக்கல்கள் யாவை ?

## பகுதி - III

( மதிப்பெண்கள்: $6 \times 5 = 30$ )

VI. *குறிப்பு :* i) 200 வார்த்தைகளில் சுருக்கமாக விடையளி.

ii) எல்லா வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

iii) ஏதேனும் 6 வினாக்களுக்கு மட்டும் விடையளி.

71. மித வெப்ப மண்டல புல்வெளி சூழ்வாழிடம் பற்றி சுருக்கி வரைக.

72. உலக மக்கள் தொகை வளர்ச்சியை பற்றி விவரி.

73. கிராம மக்களின் குடியேற்றம் பற்றி சுருக்கி விவரி.

74. செயற்பாட்டு பிணைப்பின் முக்கியத்துவத்தை வெளிக் கொணர்க.

75. வணிகக் கூட்டமைப்புகளின் பயன்கள் யாவை ?

76. தேசிய வள தகவல் தொகுதியின் செயல்பாடுகள் யாவை ?

77. உலகில் நீரின் தரம் குறையக் காரணங்கள் யாவை ?

78. சீர் குலைவில் இழப்புகளின் மதிப்பீட்டை நாம் எவ்வாறு பதிவு செய்யலாம் ?

79. வள மேலாண்மைக்காக அறிவியலாளர்கள் கையாண்டுள்ள நான்கு வேறுபட்ட அணுகு முறைகள் யாவை ?

## பகுதி - IV

VII. *குறிப்பு :* i) 400 வார்த்தைகளில் விரிவாக விடையளி.

ii) எல்லா வினாக்களுக்கும் சம மதிப்பெண்கள்.

iii) பிரிவு 'அ' வில் ஏதேனும் 3 வினாக்களுக்கு மட்டும் விடையளி.

### பிரிவு - அ

( மதிப்பெண்கள்: $3 \times 10 = 30$ )

80. முன்னேறும், பின்னடையும் மற்றும் இடைப்பட்ட வயது பிரமிடுகள் பற்றி விளக்குக.

81. தொழிலக அமைவிடக் காரணிகளை விவரி.

82. நீர் மாசடையும் முறைகளை விளக்குக.

83. இயற்கைச் சீர் குலைவு, வெள்ளப் பெருக்கு ஏற்படும் போது நாம் எவ்வாறு எதிர்நோக்க வேண்டும் ?

84. நீர் பாதுகாப்பு நுட்பங்கள் - ஆராய்ந்து விவரிக்கவும்.

### பிரிவு - ஆ

( மதிப்பெண்கள்: 10 )

85. கொடுக்கப்பட்டுள்ள உலக வரைபடத்தில் பாலைவனங்களைக் குறித்து பாலைவனச் சூழ்வாழிடங்களை விளக்குக.

*அல்லது*

உலக நில வரைபடத்தில் தென்கிழக்காசிய கூட்டமைப்பில் ( ASEAN ) அடங்கியுள்ள நாடுகளை வரைந்து காட்டி சிறு குறிப்புத் தருக.